ஆகஸ்ட் 12

# *புனித கஸ்பார் (1786-1836)*

உரோமைக் கல்லூரியில் இவர் கல்வி பயின்று குருப்பட்டம் பெற்றார். நெப்போலியனது இராணுவம் உரோமையைக் கைப்பற்றியதும் ஏராளமான குருக்களும், நம் புனிதரும் நகரில் இருந்து வெளியேற்றப்பட்டார்கள். நெப்போலியனது வீழ்ச்சிக்குப்பின் கஸ்பார் உரோமைக்குத் திரும்பினார். அங்கு ஐந்து ஆண்டுகளாக மக்கள் குருக்களின்றி வாடியிருந்தார்கள். களைப்பை கவனிக்காமல் ஊர் ஊராகப் போய் மறையுரைகள் நடத்தினார். திரு. இரத்தசபை என்னும் துறவர சபையை நிறுவினர். கைவிடப்பட்ட கெட்டவர்கள் நிறைந்த ஒரு நகரை தலைமை ஸ்தானமாக தெரிந்து கொண்டார். இவரும் இவருடைய குருக்களும் இத்தாலியா நாடு முழுவதும் சுற்றித் திரிந்து பொதுத் தியானப் பிரசங்கங்கள் செய்து வந்தார்கள். இவர்கள் வல்லமை வாய்ந்த புதிய வழிகளைக் கையாண்டு வந்தனர். பொதுதியானப் பிரசங்கங்களின் கடைசி நாளில் கெட்ட புத்தகங்களும், படங்களும் பொருட்களும் பொது இடத்தில் எரிக்கப்படும். ஒரு சிலுவையை நாட்டுவார்கள். நன்றயறிதல் கீதம் பாடப்படும். பின்னர் வேறு இடங்களில் பிரசங்கிக்கும்படி போவார்கள். பாப்பானவர் தம் கைப்பட இவருக்கு ஒரு கடிதம் எழுதி, மிகப் பரிதாபகரமான நிலையிலிருந்த நேப்பிள்ஸ் நாட்டை காப்பாற்றும்படி கேட்டுக் கொண்டார். அங்கு பாப்புவின் விருப்பப்படி ஆறு மடங்களை இவர் நிறுவினார். தொல்லைகள் வந்துகொண்டே இருந்தது என்றாலும், வேலை முடிந்தது. உலகமெங்கும் போய் வேதம் போதிக்க விரும்பிய இவர் தம் சந்நியாசிகள் பல மொழிகளைக் கற்க வேண்டுமென்று கட்டளையிட்டார்.

**சிந்தனை:**

கடவுளுக்காக களைக்கும் வரை உழைப்பது இத்துணை இனிமையாக இருந்தால், மோட்சத்தில் அவரை அனுபவிப்பது எவ்வளவோ அதிக இனிமையாயிருக்கும்! (புனித கஸ்பார்)

**செபம்:**

நித்திய பிதாவே, இறக்கிற பாவிகள் மனந்திரும்ப இயேசுவின் திருஇரத்தத்தை உமக்கு ஒப்புக் கொடுக்கிறேன்.